## நமது இரு மாநிலங்களும் இணைந்து நின்று

# நமது பண்பாட்டு உறவுகளைப் போற்றுவோம்!

### கேரள முதல்வர் பினராயி விஜயனுக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, மே 26-**

**கேரள மாநில முதல்வர் பினராயி விஜயன் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்து வலைதளத்தில் வாழ்த்துச் செய்தி வெளியிட்டுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் “நமது இரு மாநிலங்களும் இணைந்து நின்று நமது பண்பாட்டு உறவுகளையும் பொதுவான இலக்குகளையும் போற்றுவோம்!” என்று குறிப்பிட்டுள்ளார்.**



கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்களின் பிறந்தநாளையொட்டி அவருக்கு வாழ்த்துத் தெரிவித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

கேரள முதலமைச்சரும் எனது அன்புத் தோழருமான பினராயி விஜயன் அவர்களுக்கு நெஞ்சம் நிறைந்த பிறந்தநாள் வாழ்த்துகள்.

முற்போக்கான அரசு நிர்வாகத்தின் மீதான தங்களது அர்ப்பணிப்பும், கூட்டாட்சியியல் மற்றும் மதச்சார்பின்மை மீதான நமது உறுதிப்பாடும் தமிழ்நாடு - கேரள உறவினை வலுப்படுத்துகின்றன.

நமது இரு மாநிலங்களும் இணைந்து நின்று நமது பண்பாட்டு உறவுகளையும் பொதுவான இலக்குகளையும் போற்றுவோம்! தாங்கள் நீண்டகாலம் உடல்நலத்தோடும் மகிழ்ச்சியோடும் திகழ வேண்டுமென வாழ்த்திட விழைகிறேன்.

இவ்வாறு அவ்வாழ்த்துச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.





பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலுக்கு பதிலடியாக, இந்தியா மேற்கொண்ட ‘ஆபரேஷன் சிந்தூர்’ தாக்குதல் தொடர்பாகவும், தீவிரவாதிகளுக்கு ஆதரவாக பாகிஸ்தான் செயல்படுவது குறித்தும் சர்வதேச நாடுகளுக்கு விளக்கம் அளிக்க, அமைக்கப்பட்ட, அனைத்துக் கட்சியினரையும் உள்ளடக்கிய கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் தலைமையிலான எம்.பி.க்கள் குழு – ரஷ்யத் தலைநகர் மாஸ்கோவில் ரஷ்ய நாட்டின் உயரதிகாரிகள், பிரதிநிதிகள் குழுவுடன் உரையாடினர். அனைத்து வகையான பயங்கரவாதத்தையும், தோற்கடிப்பதற்கான இந்தியாவின் தெளிவான மற்றும் நிபந்தனையற்ற உறுதியையும், அதை ஒழிப்பதற்கான நமது சமரசமற்ற நிலைப்பாட்டையும் தேசிய உறுதியையும் சர்வதேச விவகாரங்களுக்கான ரஷ்ய எம்.பி.க்கள் குழுவின் தலைவர் லியோனிட் ஸ்லட்ஸ்கி மற்றும் உறுப்பினர்களிடம் வலியுறுத்தினர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.5.2025) புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் 125 நரிக்குறவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா மற்றும் கலைஞர் கனவு இல்லத் திட்டத்தின் கீழ் வீடுகட்டுவதற்கான ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வில் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.எம்.அப்துல்லா, துரை வைகோ, செல்வி.எஸ்.ஜோதிமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் மரு.வை.முத்துராஜா, எம்.சின்னத்துரை, எஸ்.டி.ராமச்சந்திரன், தாட்கோ தலைவர் நா.இளையராஜா, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், கூடுதல் செயலாளர் திருமதி ஆர்.வி.ஷஜீவனா, மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மு.அருணா, காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தா, புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திருமதி.திலகவதி செந்தில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அப்தாப் ர, மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ.ராஜராஜன் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

## புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில்

# 1,175 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள்!

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, மே 26-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.5.2025) புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் 1,175 பயனாளிகளுக்கு 40,05,31,067 ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் நேற்று புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் 125 நரிக்குறவர்களுக்கு (பழங்குடியினத்தவர்கள்) 3,59,61,812 ரூபாய் மதிப்பிலான இடங்களுக்கான வீட்டுமனைப் பட்டாக்களையும், கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடு கட்டுவதற்கான ஆணைகளையும் வழங்கினார்.

தொடர்ந்து 1,000 நபர்களுக்கு (125 நரிக்குறவர்கள் உள்பட) கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் தலா ரூ.3.50 லட்சம் வீதம் 35,00,00,000 மதிப்பீட்டில் வீடுகள் கட்டுவதற்கான ஆணைகளை வழங்கினார்.

மேலும், இந்நிகழ்ச்சியில் 50 பயனாளிகளுக்கு ஆட்சேபணையற்ற புறம்போக்கில் வரன்முறைப்படுத்தி பட்டா வழங்குதல் திட்டத்தின் கீழ் மொத்தம் 1,45,69,255 ரூபாய் மதிப்பிலான இடங்களுக்கான பட்டாக்களை வழங்கினார்.

இந்நிகழ்வில் நரிக்குறவர் இனத்தவர்கள் துணை முதலமைச்சர் அவர்களுக்கு பாசிமாலைகளை அணிவித்து மகிழ்ந்தார்கள். அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்களது குழந்தைகளுக்கு துணை முதலமைச்சர் அவர்கள் பெயர் சூட்டினார்.

இந்நிகழ்ச்சியில் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.எம்.அப்துல்லா, துரை வைகோ, செல்வி.எஸ்.ஜோதிமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் மரு.வை.முத்து ராஜா, எம்.சின்னத்துரை, எஸ்.டி.ராமச்சந்திரன், தாட்கோ தலைவர் நா.இளையராஜா, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திருமதி.திலகவதி செந்தில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திரு.அப்தாப் ரசூல், மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ.ராஜராஜன் மற்றும் அரசு அலுவலர்கள் மற்றும் பயனாளிகள் கலந்து கொண்டனர்.

## கூட்டுறவு – பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு – கரும்பு வழங்கிய

# விவசாயிகளுக்கு நிலுவைத் தொகை வழங்கிட ரூ.97.77 கோடி நிதி ஒதுக்கீடு!

### அரசாணை பிறப்பிக்கப்பட்டது! அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் பெருமிதம்!

**சென்னை, மே 26-**

**கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு நிலுவையில் உள்ள கரும்பு கிரயத் தொகை வழங்குவதற்கு ரூ.97.77 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது என சுற்றுலா மற்றும் சர்க்கரை துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.**



*அவரது அறிக்கை வருமாறு:-*

*கரும்பு விவசாயிகளின் நலன் மற்றும் சர்க்கரை ஆலைகளின் வளர்ச்சிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டில் 16 கூட்டுறவு, 2 பொதுத்துறை, 22 தனியார் என மொத்தம் 40 சர்க்கரை கரும்பு விவசாயிகளின் மீது அக்கறை கொண்ட இவ்வரசு கரும்பு சாகுபடி பரப்பை அதிகரிப்பதற்காகவும், சர்க்கரை ஆலைகளின் செயல்திறனை அதிகரிக்கவும் பல்வேறு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக கரும்பு விவசாயிகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் சிறப்பு ஊக்கத்தொகை வழங்கி வருகின்றது.*

*முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2025-26ஆம் ஆண்டு வேளாண்மை நிதி நிலை அறிக்கையில், 2024-25 அரவைப்பருவத்தில் சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு முன்எப்போதும் இல்லாத அளவிற்கு, டன் ஒன்றுக்கு ரூ.349/ சிறப்பு ஊக்கத்தொகையாக வழங்கப்படும் என அறிவித்து, இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ.297/ கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

*முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்றவுடன், ஒன்றிய அரசு நிர்ணயம் செய்த கரும்பு விலைக்கு மேல் சிறப்பு ஊக்கத்தொகையாக 2020-21 அரவைப் பருவத்திற்கு டன் ஒன்றுக்கு ரூ.192.50/ எனவும், 2021-22 மற்றும் 2022-23 அரவைப் பருவங்களுக்கு ரூ.195/ எனவும், 2023-24 அரவைப் பருவத்திற்கு ரூ.215/எனவும் 2024-25 அரவைப் பருவத்திற்கு ரூ.349/ என வழங்கி கரும்பு விலை டன் ஒன்றுக்கு ரூ.2,750/லிருந்து ரூ.3,500/ என உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளாக சிறப்பு ஊக்கத்தொகையாக 4,79,030 கரும்பு விவசாயிகளுக்கு மொத்தம் ரூ.848.16/கோடி வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2024-25 அரவைப் பருவத்திற்கு சுமார் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் விவசாயிகளுக்கு சிறப்பு ஊக்கத்தொகை வழங்க ரூ.297/ கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அரவைப் பருவம் நிறைவு பெற்றபின் கரும்பு விவசாயிகளுக்கு சிறப்பு ஊக்கத்தொகை வழங்கப்படவுள்ளது. இதன் மூலம் 6,09,030 கரும்பு விவசாயிகள் ரூபாய் 1,145.12 கோடி சிறப்பு ஊக்கத்தொகை பெற்று பயனடைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

*கரும்பு விவசாயிகளின் நலனில் அக்கறை கொண்ட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கரும்பு விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை விரைந்து வழங்கிட ஏதுவாக எட்டு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு ரூ.97.77 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார்கள். இத்தொகை சம்மந்தப்பட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மூலம் தொடர்புடைய விவசாயிகளின் வங்கிக் கணக்கிற்கு விரைவில் அனுப்பிவைக்கப்படும்.*

*முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்றது முதல், கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் வரலாற்றில் முதன்முறையாக கரும்பு விவசாயிகளுக்கு சிறப்பு ஊக்கத்தொகை மற்றும் கரும்பு கிரயத் தொகையாக சுமார் ரூ.1,945.25 கோடி வழங்கப்பட்டுள்ளது. கரும்பு சாகுபடிப் பரப்பினை அதிகரிக்கவும், சர்க்கரை ஆலைகளின் செயல்திறனை மேம்படுத்தவும் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க தமிழ்நாடு அரசால் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

*கரும்பு விவசாயிகள் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்தி, அதிக பரப்பளவில் கரும்பு சாகுபடி மேற்கொண்டு, கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்கி பயன்பெறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு கரும்பு விவசாயிகளின் நலனுக்காகவும், சர்க்கரை ஆலைகளின் வளர்ச்சிக்காகவும், சிறப்பு ஊக்கத்தொகை, மானியங்கள், கரும்பு கிரயத் தொகையை உரிய காலத்தில் வழங்க நிதி உதவி உள்ளிட்ட ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வரும் முதலமைச்சர் அவர்களுக்கு கரும்பு விவசாயிகளின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*இவ்வாறு அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் குறிப்பிட்டுள்ளார்.*



10ம் வகுப்பு பொதுத் தேர்வில், மாநில அளவில் முதலிடம் பெற்ற தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக கும்பகோணம்2 பணிமனையில் பணிபுரியும் நடத்துனர் வெங்கடேசன் மகள் சோபியாவை, தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் சந்தித்து வாழ்த்துக் கூறினார். உடன் கோகிலாம்பாள் பள்ளி தாளாளர் அன்பழகன் உள்ளார்.

## நாகாலாந்து ஆளுநர்

# இல.கணேசன் பிறந்த நாள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

புதுடெல்லி, மே 25 -

நாகாலாந்து ஆளுநர் இல.கணேசன் அவர்களை, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடர்பு கொண்டு பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவித்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

80வது பிறந்தநாள் காணும், நாகாலாந்து ஆளுநர் இல. கணேசன் அவர்களை , நேற்று (24.05.2025) தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தொலைபேசி வாயிலாகத் தொடர்புகொண்டு பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்தார்.



திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்ற கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கச் செயலாளர்கள் மற்றும் அனைத்து இணைத்துறை அலுவலர்களுடனான கலந்தாய்வுக் கூட்டத்தில் புதிதாக பதிவு செய்யப்பட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் ஆகியோர் பதிவு சான்றிதழ்களை வழங்கினர். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், மாநகர காவல் துணை ஆணையர் தீபா சத்தியன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி கோ.மலர்விழி. ஆவின் பொது மேலாளர் சுஜாதா ஆகியோர் உள்ளனர்.